பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 07 சனிக்கிழமை 23.12.2023 அதிர்வு 145

## நிஷான் துரையப்பா யாழ்ப்பாணம் விஜயம்

(ந.லோகதயாளன்)



கனடாவின் பீல் நகரத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரியாக நிஷான் துரையப்பா 04

# ஒரு வருடத்துக்குப் பின்னர் கொரோனா மரணம் பதிவு

## இலங்கை மக்கள் அச்சம்



உலகளாவிய ரீதியில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவி வருகின்ற நிலையில், இலங்கையில் கொரோனாத் தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் ஒரு வருடத்துக்குப் பின்னர் உத்தியோபூர்வமாக உறுதிப்படுத்திய கொரோனா மரணம் கண்டி தேசிய வைத்தியசாலையில் இன்று பதிவாகியுள்ளது. 04

### சகல தமிழ் அரசியல் கைதிகளும் உடனே விடுவிக்கப்பட வேண்டும்

# வடக்கு வரும் ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்கத் தீர்மானம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)



**சிறைச்சாலையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி எதிர் வரும் ஜனவரி மாதம் முற்பகுதியில் வடக்கு மாகாணத்துக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மகஜர் கையளிப்பதற்குக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு தீர்மானித்துள்ளது.** 04

# யாழில் 20 இளைஞர்களைப் புனர்வாழ்வுக்கு அனுப்ப நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கை காரணமாக கைதான 20 இளைஞர்களைப் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்தில் போதைக்கு எதிராகப் பொலிஸாரால் கடந்த சில தினங்களாக முன்னெடுப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின்போது போதைப்பொருள் கடத்தியமை, போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 100 இற்கும் 04

# கடற்படை சிவில் உத்தியோகத்தர் வயலில் இருந்து சடலமாக மீட்பு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – நாமல்வத்தை வயல் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்படையில் சிவில் உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கிண்ணியா – குறிஞ்சாங்கேணி பகுதியைச் சேர்ந்த ரபீக் முகமது முஸம்மில் (வயது 34) 04





# மன்னார் மாவட்ட புதிய அரச அதிபராக இன்று பொறுப்பேற்றார் கனகேஸ்வரன்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட அரச அதிபர் நியமனத்தில் நீண்ட மாதங்களாகத் தாமதம் ஏற்பட்டு வந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

அவர் நேற்றுமுன்தினம் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோகவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில், அரச அதிபர் இன்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இன்று காலை ஆலயங்களுக்குச் சென்று மத வழிபாடுகளில் அவர் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து புதிய அரச அதிபரை வரவேற்கும் நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த புதிய அரச அதிபர் க.கனகேஸ்வரன்,

"மன்னார் மாவட்டத்தில் தீர்க்கப்படாமல் காணப்படும் காணி விடுவிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு, சுற்றுச்சூழல் பிரச்சினை, கழிவகற்றல், வனஜீவரசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் காணிகளை விடுவிக்கும் விடயங்களை முன்னிலைப்படுத்திச் செயற்படவுள்ளேன். அதேநேரம் மாவட்ட அபிவிருத்தி விடயங்களைத் துரிதப்படுத்தி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தவுள்ளேன்." – என்றார்.













# இலங்கைப் பொருளாதார 12ஆவது ஆராய்ச்சி மாநாடு!

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

"இலங்கையின் சமகால பொருளாதார நிலையின் சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்" எனும் தொனிப்பொருளில் கவனம் செலுத்தும் இலங்கைப் பல்கலைக்கழக பொருளாதார நிபுணர்கள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 12 ஆவது இலங்கை பொருளாதார ஆராய்ச்சி மாநாடு தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (22) நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர்.



# ஆண் வேசமிட்டு போதைப் பொருள் வியாபாரம் செய்துவந்த பெண் கைது!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஆண் வேசமிட்டு போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவரை கல்கிசை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் ஓட்டோ ஒன்றைச் சோதனயிட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அதில் பயணித்த ஒருவரைக் கைது செய்தனர்.

ஓட்டோவில் பின்புறமாகச் சூட்சிதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 9050 மில்லி கிராம் கோடா, 23 ஆயிரம் ரூபா பணம், 100 டொலர் நோட்டுகள் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

கல்கிசை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மங்கல தெஹிதெனிய இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண் வேசமிட்ட பெண் தலைமுடியை கட்டையாக வெட்டி, கட்டை காற்சட்டை அணிந்திருந்துள்ளார். உடம்பில் பல இடங்களில் பச்சையும் குத்தப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படோவிட பிதேசத்தைச் சேர்ந்த 28 வயதான இந்தச் சந்தேக நபர் 22 ஆம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு மெலிபன் சந்தியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# துன்னாலை குடவத்த பகுதியில் ஹெராயினுடன் பெண் கைது!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் துன்னாலை பகுதியில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 43 வயதுடைய பெண்ணொருவர் வியாழக்கிழமை (21) கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 620 மில்லி கிராம் ஹெராயின், 6 லட்சத்து 78 ஆயிரத்து 900 ரூபா பணம் மற்றும் 16 கையடக்கத் தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டன என்று நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்







## கடற்படை...

என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிண்ணியாவில் இருந்து நாமல்வத்தை பகுதியில் உள்ள வயலுக்குச் சென்ற அவர், சறுக்கி வீழ்ந்த நிலையில் சடல மாகக் கிடந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு...

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இன்று கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதிக்கு 28 வருடங்களாகச் சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மகஜர் ஒன்றைத் தயாரிக்கும் வகையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இடையேயான மேற்படி சந்திப்பைக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன்,

“28 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை வழங்கவுள்ளோம். இதற்குச் சகல பொது அமைப்புக்களும் ஒன்றிணைய வேண்டும். பொது மன்னிப்பின் அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.” – என்றார்.



## யாழில்...

மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 பேரும் மற்றும் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கைதானவர்களில் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என்று பொலிஸ் விசாரணைகளின்போது கண்டறிந்துள்ளோம். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தி, நீதிமன்றம் ஊடாகப் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்.” – என்றார்.

## நிஷான்...

3 நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு முதல் கனடாவின் பீல் நகரத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரியாகப் பதவி வகிக்கும் அவர், இன்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

தனது குடும்ப உறுப்பினர்களுடன் காங்கேசன்துறை வீதியில் உள்ள விடுதியில் அவர் தங்கியுள்ளார்.

நிஷான் துரையப்பா, யாழ்ப்பாணம் மாநகர மேயராக இருந்த அல்பிரட் தங்கராசா துரையப்பாவின் பேரன் ஆவார்.

## ஒரு வருடத்து...

கம்பளை, ஹேத்கல பிரதேசத்தை சேர்ந்த 65 வயதான நபரே கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

கொரோனா அறிகுறிகளுக்கு இணையான அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் நுரையீலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக இன்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று அவருக்கு உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. இந்த விடயம் தற்போது இலங்கை மக்களிடையே பெரும் அச் சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இந்தியாவில் கடந்த சில நாள்களாக அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்று இந்தியாவின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் கடந்த நான்கு வாரங்களில் புதிய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 52 சதவீதம் அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.



# அகில இலங்கை சைவ மகா சபையால் மாணவருக்கு இளம் சிவதொண்டர் பயிற்சி

(எஸ். நிதர்ஷன்)



அகில இலங்கை சைவ மகா சபையால் வலிகாமம் மற்றும் தீவக கல்வி வலயங்களின் ஒத்துழைப்புடன் வட்டு இந்துக் கல்லூரியில் தரம் 8 மற்றும் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இளம் சிவ தொண்டர் வதிவிட பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை காலை அகில இலங்கை சைவ மகாசபையின் பொது செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக சைவ மாகா சபையின் கீதம் இசைக்கப்பட்டுச் சைவத்துக்கும் தமிழுக்குமாக உயிர்நீத்த உறுவுகளுக்கு அகவணக்கம் செலுத்தி நந்தி கொடியேற்றி பயிற்சி பட்டறை ஆரம்பமானது.

2025 ஆண்டில் இந்த மாணவர்கள் மூலம் பாடசாலை சிவதொண்டர் அணியை உருவாக்கி மாணவர்களை போதையற்ற நேர் சிந்தையுடைய ஆன்மீகம் சார், அறம் சார் எதிர்கால தலைமைத்துவ விருத்திக்கான பாடசாலை மட்ட செயற்பாடுகளில் மாணவர்களை பங்கெடுக்க வைப்பதே பயிற்சி பட்டறையின் எதிர்பார்ப்பாகும்.

வளவாளர்களாக பல்துறை சார்ந்தோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆன்மீகம், சிவபூசை, தலைமைத்துவம், வாழ்க்கைத் தேர்ச்சி, குழுச் செயற்பாடு, அனர்த்த முகாமை, சிவ தொண்டர் அமைப்பு, சமய தீட்சை, பாதயாத்திரை, இயக்கவியல், யோகாசனம், பண்ணிசை என பல்நோக்கில் ஆரம்ப பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இன்று ஆரம்பமான அங்குரார்ப்பண நிகழ்வில் அகில இலங்கை சைவமகா சபையின் பொது செயலாளர் பரா நந்தகுமார், தமிழ் சைவ பேரவையின் பொது செயலாளர் சிவரூபன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொருளாளர் அருள் சிவானந்தன், வலிகாமம் கல்வி வலயத்தின் ஆசிரியர் வள நிலையப் பொறுப்பாசிரியரும் தெல்லிப்பழை துர்காதேவி அறநெறி பாடசாலையின் அதிபருமான விஜகுமாரி முருகேசம்பிள்ளை, வளவாளர்கள், மாணவர்கள் , சிவதொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக எதிர்வரும் திங்கட்கிழமைவரை பயிற்சி நெறி முன்னெடுக்கப்பட்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சரித்திரம் திரும்புகிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் 2005 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவை நம்ப வேண்டாம் என்று தமிழ் மக்களுக்குச் சொன்னார்கள். அப்போது இந்த உண்மையைப் புலிகள் குறிப்பிட்டபோது தமிழ் ஆய்வாளர்கள் குழம்பினர். ஆனால் அன்று தீர்க்கதரிசனமாக விடுதலைப் புலிகள் தெரிவித்தவற்றை இன்று தன்னுடைய செயற்பாடுகளினால் ரணில் நிரூபித்து வருகின்றார்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கின்றார்.

இந்தக் கருத்தைக் கூறும் முழு உரிமையும் நியாயப்பாடும் கஜேந்திரகுமாருக்கு இருக்கவே செய்கின்றன. அதையும் அவர் இப்போது சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய ஆட்சி அதிகாரத்துக்கு வந்த போது, தீர்வுக்கான - நல்லிணக்கத்திற்கான - இந்தப் பேச்சு முயற்ச்சி நகர்வு ஆரம்பிக்கப்பட்ட போது, இது ரணிலின் நாடகம், ரணில் ஒரு போதும் இனப்பிரச்சினையை நேர்மையாகத் தீர்க்க மாட்டார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரான நாம் மக்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னோம் என்பதையும் கஜேந்திரகுமார் நினைவூட்டுகிறார். ரணில் இதனைச் செய்யவே மாட்டார் என்று அப்போதே நாம் சவால் விட்டோம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இப்போது அதுதான் நடந்திருக்கின்றது. நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு குறித்து ஏனைய தமிழ் எம்.பிக்களை அழைத்துப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனி வரக்கூடிய புதிய நாடாளுமன்றத்தில்தான் அரசியல் தீர்வு கிடைக்கும் என்றும் கூறிவிட்டார்.

அதுவும் புதிய நாடாளுமன்றம் கூடி ஒரு வருடத்திற்குள் என்று ஒரு கதை வேறு விட்டிருக்கின்றார்.

புதிய நாடாளுமன்றம் கூடி ஒரு வருடம் பூர்த்தி என்பது அடுத்த ஒன்றரை வருடங்கள் முதல் இரண்டரை வருட காலம் எடுக்கக் கூடிய விடயம்.

அப்படி வரக்கூடிய புதிய நாடாளுமன்றத்திலும் தீர்வு முயற்சி ஆரம்பிக்கப்படுவதற்கான வரைபடம் ஏதும் இல்லை.

ஜனாதிபதி ரணிலின் கூற்றில் இருந்து இரண்டு முடிவுகளுக்கு நாம் வர முடியும்.

ஒன்று - புதிய நாடாளுமன்றம் கூடி ஒரு வருடம் முடிவடையும் வரையில் தீர்வுக்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

அடுத்தது - புதிய நாடாளுமன்றம் கூடும் சமயத்தில் இருக்கக்கூடிய அரசியல் கள நிலைவரத்துக்கு ஏற்ப தீர்வுக்கான சாத்தியம் முடிவு செய்யப்படும்.

அதாவது, இப்போது தீர்வு இல்லவே இல்லை. புது நாடாளுமன்றம் கூடிய பின்னர் அது வரலாம் அல்லது வராமல் போகலாம்.

இன்னும் விளக்கமாக சொல்வதானால் தீர்வு வரும், ஆனால் வராது என்ற கதைதான்.

இதே போன்ற போக்கில் இனப்பிரச்சினை தீர்வு விடயங்களை இந்த மிலேனியத்தின் ஆரம்பத்திலும் - தான் பிரதமராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருந்து நரி தந்திரத்தோடு ரணில் விக்கிரமசிங்க கையாண்டமையை நன்கு கண்டறிந்துதான் அவர் நம்பவே முடியாதவர் என்ற கருத்தியலை புலிகள் முன் வைத்தனர்.

ஒருபுறம் புலிகளுடன் சமாதானம், சமரசம் பேசி காலத்தை இழுத்தடித்தபடி, மறுபுறத்தில் சர்வதேச வலைப்பின்னல் என்ற தந்திரக் கண்ணியை புலிகளுக்கு எதிராக ரணில் ராஜதந்திர வியூகத்தில் விரித்த போதுதான் உஷாரடைந்த புலிகள் 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு நல்ல பாடம் ஒன்றைப் புகட்டினர்.

போன மிலேனியத்தின் முடிவிலும், இந்த மிலேனியத்தின் ஆரம்பத்திலும் நடைபெற்ற இரண்டு ஜனாதிபதி தேர்தல்களிலும் ரணில் விக்கிரமசிங்க மண் கவ்வுவதற்கு தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாக இருந்த விடுதலைப் புலிகளே காரணமாகினர்.

இப்போதும் அதேபோல தமிழர் தரப்பிடம் தனது நரித் தந்திரத்தைக் காட்டும் அவர், அடுத்து வரப்போகும் ஜனாதிபதி தேர்தலிலும் அதே பாடத்தைத் தமிழர் தரப்பிடமிருந்துதான் மீண்டும் ஒருமுறை கற்றுக்கொள்ளத் தயாராகின்றார் என்றே தோன்றுகின்றது.

சரித்திரம் மீண்டும் திரும்புகிறது...!

# இரண்டு சுய தொழில் குழுக்களுக்கு பெறுமதி வாய்ந்த உபகரணங்கள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேசச் செயலர் பிரிவில் இயங்கி வரும் இரண்டு சுய தொழில் குழுக்களுக்கான சுய தொழிலை மேம்படுத்துவதற்கான பெறுமதி வாய்ந்த தொழில் சார் உபகரணங்கள் மன்னார் பிரதேசச் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் இந்தத் தொழில் சார் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்ப அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் குழுக்களாக செயற்பட்டுக் கொண்டிருந்த பட்டித்தோட்டம் கிராமத்தில் உள்ள குழு ஒன்றுக்கு அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் மாவட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகர் எம்.சுதாகர் ஊடாக பனையோலை கைப்பணிகளை வாழ்வாதாரமாக முன்னெடுக்கும் இந்தக் குழு உதவி வழங்கப்பட்டது.

மன்னார் பெரிய கமம் கிராமத்தில் தும்புத்தடி மற்றும் விளக்குமாறு உள்ளிட்ட கைவினைப் பொருள்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக சுமார் 3 லட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான தும்புத்தடி சீவும் இயந்திரம் வழங்கப்பட்டது.





# சித்திரபாட மாணவர்களுக்குச் செயலமர்வு



(த.சுபேசன்)

உயர்தரத்தில் சித்திர பாடத்தை கற்கும் மாணவர்களுக்கான இலவச செயலமர்வு அண்மையில் சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தில் இடம்பெற்றது.

ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூட நிறுவுனர் திருமதி யோகமணி அழகரத்தினத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கருத்தமர்வில் சித்திர பாட ஆசிரியர்களான கே.நிதாகரன், கே.நிமல்தாஸ், எம்.லாவண்யன், பி.அரியதாஸ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் க.பொ.த. உயர்தரத்தில் சித்திர பாடத்தை கற்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# 60 வயதான உலக சாதனையாளர் திருச்செல்வத்துக்குக் கௌரவிப்பு



(த.சுபேசன்)

சாவகச்சேரி, மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 60 வயதான உலக சாதனையாளர் செ.திருச்செல்வத்துக்கு மட்டுவில் மத்தி கலைவாணி முன்பள்ளி சமூகத்தினரால் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற கலைவாணி முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வின் ஓர் அங்கமாக உலக சாதனையாளருக்கு கௌரவமளிக்கப்பட்டது.

சாந்தநாயகி வித்தியாலய அதிபர் க.சந்திரபவன் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு மற்றும் கலைவிழா நிகழ்வுகளில் விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் ச.கிருஸ்ணன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கிருஷ்ணரட்சகன், வி.எஸ்.ஓ. ஸ்ரூடியோ உரிமையாளர் விசோபன், ஜே-312 கிராம அலுவலர் பா.சுபாஷன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈ.ராகுலன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் தனது தாடியின் உதவியுடன் குறைந்த நிமிடங்களில் 400 மீற்றர் தூரம் 2000கிலோ எடை கொண்ட வாகனத்தை இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த மானிய விதை உருளைக்கிழக்கில் முறைகேடு!

## சந்தேகம் வெளியிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்



(த.சுபேசன்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு 2023 - 24 காலப் பகுதியில் செய்கை மேற்கொள்ள எடுத்துவரப்பட்ட விதை உருளைக்கிழங்கு உரிய நடைமுறை களை மீறி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதா?. யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலை யில் வழங்க இருந்த விதை உருளைக் கிழக்கில்முறைகேடு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இரா மநாதன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

21 மெக்றிக் தொன் விதை உரு ளைக் கிழங்கு அழுகிய நிலையில் கண்டறியப்பட்ட விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பான கடிதம் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மானிய விலையில் விதை உரு ளைக்கிழங்கு வழங்க வேண்டுமென ஏழாலை விவசாய சம்மேளனத்தினர் என்னிடம் வேண்டுகோள் விடுத்தி ருந்தது.

இதனை அடுத்து கடந்த 01.10.2023 அன்று இது தொடர்பாக விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலா ளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி யிருந்தேன்.

இருப்பினும் அதன் பின்னர் உரு ளைக்கிழங்கு இறக்குமதி செய்யும் நாடுகளில் போதிய இருப்பு இன்மை யால் இந்த மானியத்தை விவசாய அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ஊடாக செயற்படுத்த முடியாது என்று எனக்கு எழுத்து மூலம் தெரியப்படுத் தப்பட்டிருந்தது.

இருப்பினும் மானிய திட்டம் நிறுத் தப்பட்டதாக தெரியப்படுத்தப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது எந்தவகையில் சாத்தியம்?

இது தொடர்பாக விவசாய அமைச் சர் கலந்து கொண்ட விவசாய குழுக் கூட்டத்தில் கூட அதிகாரிகளால் எந்த விதமான தகவல்களும் வழங்கப்பட வில்லை.உரிய நடைமுறைகளை மீறி விதை உருளைக்கிழங்கு நாட் டுக்குள் கொண்டுவரப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதி பதி பங்குபற்றவுள்ள யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு முன்னர் இந்த விவகாரம் தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொள்ளப் பட வேண்டும்.

அத்துடன் உருளை கிழங்கு செய் கைக்கான தயார்படுத்தல் செலவுகளை உரிய நிறுவனத்திடம் இருந்து பெற்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இம் முறை பெரும்போகத்தில் மாற்று பயிர்ச் செய்கையில் இந்த விவசாயிகள் ஈடுபடுவதற்கான உதவிகளையும் ஜனாதிபதி செய்து கொடுக்க வேண் டும்.-என்றுள்ளது.

# கிருந்தை கடற்படை வீரர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திடீர் அனர்த்தங்களும் முகம் கொடுக்கும் வகையில் கிருந்தை மீன்பிடி துறைமுகத்தில் கடல்சார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் கடற் படை வீரர்களுக்கு பயிற்சி வழங் கும் வேலைத் திட்டம் ஒன்றை அம்பாந்தோட்டை அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் முன்னெடுத்து வருகின்றது.



அதன் அடிப்படையில் கட்டம் கட்ட மாக கடற்படை வீரர்கள் ஒன்றிணைக் கப்பட்டு தமது நாளாந்த கடமைகளோடு அனர்த்த முகாமைத்துவம் தொடர் பான பயிற்சிகளையும் பெற்று வரு கின்றனர்.



# ‘ஆயுளுக்குள் ஆயிரம் வீடு’ புத்தளத்தில் அமைக்கத் திட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நடவடிக்கை





**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் “தனது ஆயுளுக்குள் ஆயிரம் வீடு” என்ற வீடற்ற மக்களுக்கான வாழ்விடம் வழங்கும் செயற்றிட்டத்தின் முதலாவது வேலைத் திட்டம் புழுதிவயல் கரம்பையில் அமைப்பதற்கான கள விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இவ் விஜயத்தின் போது புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கிராமிய பொருளாதார ராஜங்க அமைச்சர் காதர் மஸ்தான், ஐ.எஸ்.ஆர்.சீ. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மிஹ்லார், வீடமைப்பு திட்டத்துக்கான நிதி வழங்கும் வெளிநாட்டு நிறுவனத்தின் அதிகாரி மற்றும் வீடமைப்பு திட்டத்தை மேற்கொள்ள உள்ள பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புழுதிவயல் கரம்பையில் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தனக்கு சொந்தமான காணியில் எட்டு ஏக்கரை இந்த வீடமைப்பு திட்டத்துக்கு வழங்கவுள்ளார்.

இதில் சுமார் 100 வீடுகள் அமைப்பதற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்படும் வீடுகள் புத்தளம் தொகுதி மக்களுக்கும் மற்றும் வடபுல மக்களுக்கு விகிதாசார அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளன.

வீடமைப்பு திட்டத்துக்கான பேச்சுகளும் ஆவணங்கள் கைச்சாத்திடலும் ஐ.எஸ்.ஆர்.சீயின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றன.

# புத்தளம் முன்னாள் நகரபிதா ஆளுநரின் இணைப்பாளராக!

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம் முன்னாள் நகரபிதா எம்.எஸ்.எம் ரபீக் புத்தளம் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்கான வடமேல் மாகாண ஆளுநரின் விஷேட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களுக்கான விஷேட கூட்டம் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே, வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடமேல் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் அனைவரும் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆளுநரின் விஷேட இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



இந்த நியமனம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக், புத்தளம் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்கான ஆளுநரின் இணைப்பாளராக செயற்படுவார்.

அத்துடன், பொது மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்வது, ஆளுநரின் புத்தளம் விஜயத்தை ஒழுங்குபடுத்துவது, அபிவிருத்தி திட்டங்களுக்கான திட்டமொழிவுகளை முன்வைப்பது போன்ற பணிகள் ஆளுநரின் இணைப்பாளர்களுக்கு உரிய அதிகாரங்களாக வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, ஆளுநரின் இணைப்பாளர்களான உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களுக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் அளவில் சிறிய அளவிலான அபிவிருத்திப் பணிக்காக மாகாண ஆளுநரால் 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# தரம் உயர்த்தப்பட்ட கல்வி நிறுவனம்

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

Amazon College கல்வி நிறுவனம் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கொழும்பு 4 இல் அமைந்துள்ள Amazon College உயர்கல்வி நிறுவனம் கடந்த 18 டிசெம்பர் 2023 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவில் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் 120 டிப்ளோமா மாணவர்கள் 50 எச்.என்.டி. மாணவர்கள் 150 பட்டதாரி மாணவர்கள் மற்றும் முதுமாணி மாணவர்கள் விருதுகளைப் பெற்றனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், பிரதி மாலைதீவுகள் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இலங்கை தூதர்கள் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இலங்கையின் தேசிய பல்கலைக் கழகங்களில் இருந்தும் சுமார் ஐந்து பேராசிரியர்கள் மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தந்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் சானக உதயகுமார அமரசிங்க விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

கல்லூரியின் 35 விரிவுரையாளர்கள் 20 ஊழியர்களும் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதுகளும் சிறந்த இணை நிறுவனத்துக்கான விருதுகளும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன.

மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த நிகழ்ச்சியை அலங்கரித்தனர்.





# மன்னார் பறப்பங்கண்டல் மாணவருக்குச் சின்னம்சூட்டல்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசமான பறப்பங்கண்டல் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையில் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# அக்கரைப்பற்று மாணவர்களுக்கு காலணிக்கு வவுச்சர்கள் வழங்கல்



(கே.எ.ஹமீட்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள 47 பாடசாலைகளின் மாணவர்களுக்கான காலணி வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச தரப்பின் பிரதி நிதியாக தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான காலணி வவுச்சர்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா, கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.றஸ்மி, ஏ.எல்.செய்னுடீன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. தாஹிர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கல்வி அமைச்சால் மிகக் கடின, கடின மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு காலணிகளை கொள்வனவு செய்வதற்காக 3 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் இதன்போது வழங்கப்பட்டன.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் 16 பாடசாலைகளும், அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் 10 பாடசாலைகளும், பொத்துவில் கல்விக் கோட்டத்தில் 21 பாடசாலைகளும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு சகல மாணவர்களுக்குமான காலணி வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

# விழிவெண்படல நோய் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களுக்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவிவரும் விழிவெண்படல நோய் தொடர்பான அறிகுறிகள், அவற்றுக்கான சிகிச்சை முறை தொடர்பாகப் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் பாடசாலை திறந்தவெளியரங்கில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ரீ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் சோமசூரியம் திருமால் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டார்.



# புலமைச் சாதனையாளர் கௌரவிப்பு!

(த.சுபேசன்)

கைதடி போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் புலமைச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுனில் ஆரியரட்ண மற்றும் தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் த.தயாபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது பாடசாலையின் புலமைப்பரிசில் சாதனையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.








# கல்முனை 'யங்பேட்ஸ்' ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு உதவி!

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான தறப்பாள் அமைப்பின் உறுப்பினர் ஏ.எம்.பைசாலால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் இந்த உயரிய சேவைக்கு ஆதரவு வழங்கி ஊக்குவிக்கும் நோக்கில் இவை வழங்கப்பட்டுள்ளன.

உறுப்பினர் ஏ.எம்.பைசால், ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம்.எம்.மர்சூக் மற்றும் உப தலைவர் எஸ்.அஷ்ரப்கான் ஆகியோரிடம் இவற்றைக் கையளித்தார்.

இங்கு ஸஹ்றியன் 93-96 வெல்பெயார் அமைப்பின் தலைவர் ஏ.எம். அஸ்வர் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# கலாசார போட்டி வெற்றியாளர் கௌரவிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மஹா வித்தியாலயத்தில் இருந்து 2023 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச சபையின் கலாசார பிரிவால் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவில் 12 மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்கள் மற்றும் சித்திரப் போட்டியில் திறமை காட்டி 2 ஆம் இடத்தைச் சுவீகரித்துக் கொண்ட தரம்-7 மாணவி எம்.எப்.எப். ஹன்சா ஆகியோருக்கான விஷேட பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ.சுந்தரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வெற்றிக்காக பாடசாலை ஆசிரியை திருமதி. மஸ்றா சுகூர்தீனுக்கும் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவச் செல்வங்களுக்கும் பாடசாலை நிர்வாகத்தின் சார்பாக வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் வீ.எம். ஸம்ஸம் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சிங்கர் காட்சியறை உரிமையாளர் எஸ்.எச். ஜிப்ரி கலந்து கொண்டு பாடசாலைக்கு தேவையான உதவிகளை பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

பிரதி அதிபர் ஏ.எல். ரஜாப்தீன், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.









# மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கல்

(ரஸீன் ரஸ்மின்)

மாற்றுத் திறனாளிகளின் சிறப்பு அம்சங்களை, தேவைகளை இனங் கண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவால் தற்காலிக அடையாள அட்டை வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் அங்கு ரார்ப்பண நிகழ்வு புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

தேர்தல் ஆணைக்குழு, மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அமைப்பு மற்றும் பஃப்ரல் அமைப்பு ஆகியவை இணைந்து இந்தத் திட் டத்தை செயல்படுத்துகின்றன.

டிசெம்பர் 3 ஆம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம். இதனை முன்னிட்டு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாக தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் சுமார் 500 இற்கும் அதிகமான மாற்றுத் திற னாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

அங்குரார்ப்பண நிகழ்வின் போது 75 பேருக்கு அடையாள அடையாள அட்டைகள் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டன.

இந்தத் தற்காலிக அடையாள அட்டைகள் நாடளாவிய ரீதியில் வாழும் சுமார் 5 ஆயிரம் மாற்றுத் திறனாளி களுக்கு வழங்கப்படவுள்ளன.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்காகவும், வாக்களிக்கத் தகுதியுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்க மாகும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய போது தெரி வித்துள்ளார்.









# மட்டக்களப்பு சிசிலியா ஒளிவிழா!

(அஸ்ஹர் இப்றாஹிம், பழுவூரான்)

கிறிஸ்து பிறப்பை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் அருட் சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் நேற்று முன்தினம் ஒளிவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை இருதய நாதர் ஆலய பங்குத் தந்தை அருட் தந்தை ஏ.தேவதாஸன், வட கிழக்கு மெதடிஸ்த திருச் சபையின் தலைமைப் போதகர் கே.ஆர்.அருள்ராஜா ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.





# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலர் உணவு



(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவன் பிட்டி கிராம மக்களுக்கு பிரித்தானியா மன்னார் நலன்புரிச்சங்கம் மற்றும் பிரான்ஸ மன்னார் நலன்புரிச் சங்கம் இணைந்து உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளன.

சுமார் 200 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கப் பட்டுள்ளன.

கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.





# பதுளை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் மிகவும் பின்தங்கிய, அடிப் படை வசதிகளற்ற பாடசாலைக்கும் அதில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் உதவிவரும் ஆட் ஒப் செரட்டி ஸ்ரீலங்கா அமைப்பு அண்மையில் பதுளை மாவட்டத்திலுள்ள, பதுலு ஓயா, வெல்லே வெலதென்ன வித்தியாலய மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி யுள்ளது.

பாடசாலையில் நிலவும் குறை பாடுகளை கேட்டறிந்து கொண்ட அமைப் பினர் எதிர்காலத்தில் இந்தப் பாட சாலைக்குப் பலவிதமான உதவி களைப் பெற்றுத் தருவதாக உறுதிய ளித்தனர்.

பாடசாலை வளாகத்தில் மரங்க ளையும் நட்டு வைத்தனர்.





# டில்லி இண்டியா கூட்டணி போராட்டம்!




எதிர்க்கட்சி எம்.பி.க்களின் இடை நீக்கத்தை கண்டித்து, இண்டியா கூட்டணி கட்சிகள் டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

மக்களவை அத்துமீறல் சம்பவம் குறித்து நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பதில் அளிக்ககோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனால்146 எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். இதை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்துக்குள் இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் டில்லி ஜந்தர் மந்தரில், இண்டியா கூட்டணி சார்பில் நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், மார்க்சிஸ்ட் கட்சியின் சீதாராம் யெச்சூரி, இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா, ஜே.எம்.எம். கட்சியின் மஹுவா மஜி, தி.மு.கவைச் சேர்ந்த திருச்சி சிவா உட்பட இண்டியா கூட்டணி தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பேசிய கார்கே, "பா.ஜ.க. ஆட்சியில் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், இண்டியா கூட்டணி கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்தால், மோடி அரசால் எதுவும் செய்ய முடியாது. நம்மை எவ்வளவுக்கு எவ்வளவு நசுக்கிறார்களோ அந்த அளவுக்கு நாம் வீறு கொண்டு எழுவோம். நாட்டையும், ஜனநாயகத்தையும் காக்க நாம் ஒன்றிணைந்து போராடுகிறோம்" என்றார்.

# மக்களின் குரலை மத்திய அரசு நசுக்குகிறது: எம்.பி.க்கள் இடைநீக்கம் குறித்து ராகுல் கருத்து



கோடிக்கணக்கான மக்களின் குரலை மத்திய அரசு நசுக்குகிறது என்று காங்கிரஸ் கட்சியில் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

146 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து இண்டியா கூட்டணி நேற்று டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தியது.

இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி பேசுகையில், "மத்திய அரசு எம்.பி.க்களை மட்டும் நீக்கவில்லை. அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் குரலை நசுக்கி இருக்கிறது. மக்களவைக்குள் இருவர், வண்ணப் புகைக் குப்பிகளுடன் நுழைந்திருக்கிறார்கள் என்றால், அவர்களால் வேறு பொருட்களையும் கொண்டு வந்திருக்கமுடியும். பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை, இதனால்தான் இதுபோன்ற சம்பவங்கள் அரங்கேறுகின்றன.

தாங்கள்தான் தேச பக்தியாளர்கள் என்று கூறும் பா.ஜ.கவின் எம்.பி.க்கள் இந்த சம்பவத்தின்போது அவையை விட்டு ஓடிவிட்டனர். ஊடகத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடலாம் என்றும் அதானிக்கு நாட்டின் சொத்தை தாரை வார்த்து விடலாம் என்றும் பா.ஜ.க. அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது. பா.ஜ.க. அரசுடனான எங்கள் மோதல், அன்பும் வெறுப்புக்கும் இடையிலான மோதல்" என்றார்.

# இந்தியாவில் ஒரே நாளில் 752 பேருக்கு கொரோனா தொற்று!

இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 752 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 420 ஆக அதிகரித்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கர்நாடகா, கேரளா உள்ளிட்ட 10 மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் உயர்ந்து வருவதாக நேற்று சுகாதார அமைச்சகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 752 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3,420 ஆக அதிகரித்துள்ளது.

# இஸ்ரேலின் நோக்கம் தோல்வி அடையும்: ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுப்பு



காசாவில் உள்ள போராளிக் குழுவை ஒழிக்க நினைக்கும் இஸ்ரேலின் நோக்கம் தோல்வி அடையும் என்று ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, படைப்பிரிவுகளின் செய்தித் தொடர்பாளர் அபு ஒபைடா கூறுகையில்,

"காசா போராளிக் குழுவை ஒழிப்ப தற்கான இஸ்ரேலின் நோக்கம் தோல்வி அடையும்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல் அல்லது நேரடி இராணுவ நடவடிக்கைகள் பணயக்கைதிகளை விடுவிக்காது.

பேச்சுக்களில் ஈடுபடாவிட்டால் பணய கைதிகளை உயிருடன் விடுவிக்க முடியாது. பேச்சுவார்த்தைகளுக்கு மாற்று எதுவும் இல்லை.

இஸ்ரேல், தொடர்ந்து தாக்குதல் நடத்தினால், அது பணயக்கைதிகளின் மரணத்திற்கு வழிவகுக்கும்." என்றார்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர்.

சுமார் 250 பேர் பணய கைதிகளாக பிடிக்கப்பட்டு காசாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதை தொடர்ந்து, ஹமாசை அடியோடு ஒழிப்போம் என சூளுரைத்து காசா மீது இஸ்ரேல் போரை தொடங்கியது.

இந்த போர் 2 மாதங்களை கடந்து நீண்டு வருகிறது. சர்வதேச நாடுகளின் முயற்சியால் காசாவில் 7 நாட்கள் போர் நிறுத்தப்பட்ட நிலையில், அதன் பின்னர் காசா மீதான போரை இஸ்ரேல் மீண்டும் தொடங்கியது.

அப்போது முதல் தெற்கு காசாவை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் மிகவும் ஆக்ரோஷமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் இரவு, பகல் பாராமல் குண்டு மழை பொழிந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்காவில் பொலிஸாருக்கு எதிராக போராட்டம்!




அமெரிக்காவில், பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் உயிரிழந்த விவகாரத்தில் தொடர்புடைய பொலிஸார் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2020 ஆம் ஆண்டு மானுவல் எல்லிஸ் என்ற 33 வயதான நபர் வொஷிங்டன் பொலிஸாரின் காவலில் இருந்தபோது உயிரிழந்தார்.

இந்த நிலையில் அவர் பொலிஸார் தாக்கியதினாலேயே உயிரிழந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

இதனையடுத்து, அந்த வழக்கு தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய 3 பொலிஸ் அதிகாரிகளையும் நீதிமன்றம் அண்மையில் விடுதலை செய்தது.

இந்த நிலையில், அந்த பொலிஸ் அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக சமூக ஆர்வலர்கள் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

